# உடன்பிறப்பே... 71

நீரை.மகேந்திரன்

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த சி.டி.தண்டபாணி அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

ஓவியம் : ரவி பேலட்



# சி.டி.தண்டபாணி
## கோவைக் கழக அச்சாணி!

2001-ஆம் ஆண்டு, ஆட்சி மாற்றம் நிகழ்ந்து அ.தி.மு.க ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் கழகம் பெருவெற்றி பெற்றது. “அராஜக இருட்டுக்குள் ஜனநாயக அகல் விளக்கு ஏற்றிய தமிழக மக்கள்” என அந்த நாட்களைப் பதிவு செய்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர். அக்டோபர் 25-ஆம் தேதி, சென்னை மாநகரத் தந்தையாக இரண்டாவது முறையாகப் பதவியேற்றார் இன்றைய முதலமைச்சர் அவர்கள். கழகத்தினரின் கொண்டாட்டங்கள் மறைவதற்குள், கழகத்தின் முன்னோடி, கோவை மாவட்டக் கழகத்தின் அச்சாணி சி.டி.தண்டபாணி அவர்கள் மரணமடைந்தது, கழகத்தினரின் கலவையான உணர்ச்சி நிலைகளுக்கு அனுபவமாக அமைந்தது.

“வரலாற்றுச் சான்றுகளுடன் கடல் மடை திறந்தாற்போல சொற்பொழிவாற்றும் திறன் படைத்தவரும் - நாடாளுமன்ற, சட்ட மன்றங்களில் ஆக்கபூர்வமான அரிய கருத்துகளை எடுத்துரைத்த, என்னுடைய அன்பு உடன்பிறப்புகளில் ஒருவர்” என கலைஞரின் பேனா அன்று, அவரை மீண்டும் அடையாளம் காட்டி இரங்கல் தெரிவித்தது.

ஆற்றல்மிகு அந்த முன்னோடி, சி.டி.தண்டபாணி அவர்கள் மறைந்து 23 ஆண்டுகளைக் கடந்தும், கோவைக் கழகத் தொண்டர்கள் அவர் நினைவாக, ஒவ்வோர் ஆண்டும் நடத்தும் நினைவேந்தல் நிகழ்ச்சிகளே அவருக்கும் கழகத்தினருக்குமான உறவைச் சான்றாகப் பகரும்.

### வங்கிப் பணி துறந்து, மக்கள் மன்றம்

உயர்நிலைக் கல்வி படித்துவிட்டு, வங்கிப் பணிக்குச் சென்றுகொண்டிருந்தவரை, திராவிடச் சிந்தனைக்குத் திருப்பி விட்டவர், அவரது அண்ணன் மருதாசலம். பேரறிஞர் அண்ணாவின் அறிவுப் பட்டறையில், அன்புத் தம்பியாக விளங்கிய மருதாச்சலம், அவரது தம்பி தண்டபாணியையும் திராவிட முன்னேற்றக் கழக அரசியலுக்குக் கொண்டு வந்தார். அவர்களது பெற்றோர் திருமூர்த்தி -அங்கம்மாள். 1933-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4-ஆம் தேதி பிறந்தவர். கோவையைப் பூர்வீகமாகக் கொண்டவர். ஆர்.எஸ்.புரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளி மற்றும் அரசுக் கல்லூரியில் இன்டர்மீடியேட் பட்டம் பெற்றவர்.

‘ஸ்டேட் பாங்க்’ பழனி கிளையில் பணியாற்றிக் கொண்டிருந்தவரை, தனது வங்கிப் பணியை உதறிவிட்டு, வர வைத்தது பேரறிஞர் அண்ணாவின் அழைப்பு. 1967-ஆம் ஆண்டு தேர்தலில் கழகத்தின் சார்பில், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு அமைந்தது. முதல் வாய்ப்பிலேயே வெற்றிபெற்று டெல்லி சென்றார் சி.டி.தண்டபாணி. அண்ணா வழங்கிய வாய்ப்பு மட்டுமல்ல, கழகத் தலைவராக கலைஞர் அவர்களும் சி.டி.தண்டபாணியிடம் நிறைந்த அன்பு கொண்டிருந்தார் என்பதற்கு, அடுத்தடுத்து வழங்கிய வாய்ப்புகளையும் பொறுப்புகளையும் குறிப்பிடலாம்.

### தேர்தல் களம்

1971-ஆம் ஆண்டும் தாராபுரம் தொகுதியில் இருந்து கழகத்தின் உறுப்பினராக நாடாளுமன்றம் சென்றார். 1977-ஆம் ஆண்டு பொள்ளாச்சியில் போட்டியிட்டுத் தோற்றவர், 1980-ஆம் ஆண்டு தேர்தலில் அதே தொகுதியில் வெற்றிபெற்று, நாடாளுமன்றத்தில் திறம்பட பணியாற்றினார். அந்தமுறை கழகத்தின் சார்பில், நாடாளுமன்ற மக்களவைக் கழகக் குழுவின் தலைவராக நியமித்தார் கலைஞர்.

மக்களவையில் அவரது சிறப்பான செயல்பாடுகளுக்காக பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர் என்று தனித் தீர்மானம் கொண்டு வந்து பாராட்டப்பட்டார். முன்னாள் குடியரசுத் தலைவர்கள் கியானி ஜெயில்சிங், பிரணாப் முகர்ஜி, முன்னாள் பிரதமர்கள் இந்திரா காந்தி, வாஜ்பாய் ஆகியோரிடம் நெருங்கிய நட்பு கொண்டு, கழகத்தின், கலைஞரின் உடன்பிறப்பாக டெல்லி அரசியலில் செல்வாக்குக் கொண்டிருந்தார்.

1984-ஆம் ஆண்டு நீலகிரி தொகுதியிலும், 1991-ஆம் ஆண்டு பொள்ளாச்சி தொகுதியிலும் போட்டியிட்டு தோல்வியடைந்தார். அவர் தோல்வியடைந்த காலங்கள் எல்லாம் கழகத்தின் சோதனையான காலகட்டங்கள் எனலாம்.

சட்டமன்றக் களத்திலும் சி.டி.தண்டபாணிக்கு வாய்ப்புகளை வழங்கி, என்றைக்கும் அவரை அணுக்கமாக வைத்திருந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். 1989-ஆம் ஆண்டு அவிநாசி தொகுதியிலும், 1996-ஆம் ஆண்டு கோவை மேற்கிலும், 2001-ஆம் ஆண்டு மீண்டும்

**அனைத்துத் தரப்பு மக்களையும் அரவணைத்துச் சென்ற, மதிப்புக்குரிய ஆளுமையாக கோவைக் கழகத்தின் அடையாளமாக நின்றார்!**

கோவை மேற்கிலும் தொடர்ந்து கழகத்தின் வேட்பாளராக களம் கண்டார். 1996-ஆம் ஆண்டு 62 சதவிகித வாக்குகளுடன் அவர் பெற்ற வெற்றி, கழகத்தின் சாதனைகளில் பொறிக்கப்பட்டுள்ளது.

### கோவை மாநகர் மாவட்டம்

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, 1993-ஆம் ஆண்டில் கட்சி சந்தித்த குழப்பத்தின் போது, கோவை மாவட்டக் கழகத்திலும் அதன் தாக்கம் இருந்தது. அப்போது தலைவர் கலைஞர் அவர்கள், கழக அமைப்பு விதிகளில் திருத்தம் கொண்டுவரச் செய்து, கோவை மாவட்டக் கழகத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர் என்கிற பொறுப்பினை உருவாக்கி, அதற்கு சி.டி.தண்டபாணி அவர்களை நியமித்தார். அந்தப் பொறுப்பில், அவர் செயல்பட்ட ஆண்டுகளில், கழகப் பணிகள் அடைந்த வேகத்தினை இன்றும் கோவை மாவட்டக் கழகத்தினர் நினைவுகூர்கின்றனர்.

மாநாடுகள், பொதுக்கூட்டம், தெருமுனைப் பிரச்சாரம் என, கழக முன்னோடிகளுடன் இணைந்து, சுற்றிச் சுழன்றவர் அவர். 1996-ஆம் ஆண்டில் அவர் சட்டமன்ற உறுப்பினரானபோது, பல நாட்கள் அந்த அலுவலகத்திலேயே தங்கி இருந்து, கழகப் பணிகளில் கவனம் செலுத்தினார்.

“அவர், மாநகர் மாவட்டச் செயலாளராக இருந்த காலத்தில், கட்சியினர் அனைவரும் உழைப்பாளிகள். ஏனென்றால் அவர் வேகத்துக்கு ஈடுகொடுக்க வேண்டும். அதனால்தான் அனைத்துத் தரப்பு மக்களையும் அரவணைத்துச் சென்ற, மதிப்புக்குரிய ஆளுமையாக கோவைக் கழகத்தின் அடையாளமாக நின்றார்” என்கின்றனர்.

### அண்ணாவின் தம்பியாக...

1966-ஆம் ஆண்டில், உடுமலைப்பேட்டைப் பகுதிகளுக்கு அண்ணா பயணம் மேற்கொண்டு இருந்தபோது, சிலர் அவரைத் தாக்க முற்பட்டுள்ளனர். அப்போது, அண்ணாவுடன் காரில் இருந்த சி.டி.தண்டபாணி, அந்தக் ‘காலி’களை விரட்டி அடித்த சம்பவத்தை **‘உடுமலை வரலாறு’** என்கிற நூல் பதிவு செய்துள்ளது. இப்படி, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாக, கிளைக் கழகத்தின் பொறுப்பு, வட்ட, மாவட்டப் பிரதிநிதி என படிப்படியாக வளர்ந்து, நாடாளுமன்ற, சட்டமன்ற பொறுப்புகளுடன், கழகத்தின் வெளியீட்டுச் செயலாளர் என்கிற பெரும் பணியையும் சுமந்தவர் சி.டி.தண்டபாணி. தமிழக கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் தண்டபாணி அவர்கள் சில காலம் பணியாற்றியுள்ளார்.

கழகத்தின் ஏடான, ’நம்நாடு’ இதழ், நாடாளுமன்றத்தில் சி.டி.தண்டபாணி அவர்கள் ஆற்றிய பணிகளை அப்போது கவனப்படுத்தியுள்ளது. 1967 வங்கி சட்டத் திருத்த மசோதா வந்தபோது, ‘தனியார் வங்கிகள் மீது சமுதாயக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாமல், மசோதா உருவாக்கப் பட்டுள்ளதாக’ கழகம் எதிர்ப்புத் தெரிவித்தது. கழகத்தின் குரலை, நாடாளுமன்றப் பொறுப்புக் குழுவின் அறிக்கையில், எதிர்ப்புக் குறிப்பாக எழுதியவர் சி.டி.தண்டபாணி.

2001-ஆம் ஆண்டில், சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்னர், உடல்நலம் பாதிக்கப்பட்டவர், ஒரு மாத காலமாக நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், அக்டோபர் 28-ஆம் தேதி, தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டார்.

ஒரேநாளில் 10 கூட்டங்கள், தமிழக அமைச்சரவையையே கொண்டுவந்து கோவையில் தெருமுனைக் கூட்டங்கள் என மகத்தான அரசியல் பணிகளை நடத்திக் காட்டிய அந்த கால்கள் 68 வயதில் ஓய்ந்தபோது, கோவைக் கழகம் கலங்கி நின்றது. “கழகம் வளர்க்க அரும்பாடுபட்ட தலைவர்களின் வரிசையிலே வைத்து மதிக்கத்தக்கவர்தான் என்னுடைய அருமைத்தம்பி தண்டபாணி” என தலைவர் கலைஞர் அன்று இரங்கல் வடித்தார்.

எளிய, ஒடுக்கப்பட்ட வகுப்பில் பிறந்து, கழகத்தின் முன்னணித் தொண்டராக, அரசமைப்பு மன்றங்களில் ஆளுமையாக, மாவட்டச் செயலாளராக மக்கள் மன்றங்களில் பணியாற்றிய சி.டி.தண்டபாணி அவர்கள் என்றும் நம் நினைவுக்குரியவர்.

...துடிக்கும்

### மகத்தான மாதிரிப் பள்ளிகள்

தமிழ்நாடு அரசின் மாதிரிப் பள்ளிகள் குறித்த, தகவல்களைக் கேட்க கேட்க வியப்பாகவும் பிரமிப்பாகவும் இருக்கிறது, என முகநூலில் பதிவிட்டுள்ளார், மருத்துவர் சிவபாலன் இளங்கோவன். திருச்சியில் உள்ள மாதிரிப் பள்ளியின், சுதந்திர தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டவர், அங்கு மாணவர்களுடன் நடத்திய உரையாடல்களையும் பதிவிட்டுள்ளார்.

“ஏழை, எளிய குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களின் வாழ்க்கையில், இந்தப் பள்ளிகள் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. இந்தப் பள்ளியில் உள்ள மாணவர்களுடன் பேசினேன். அதில் ஒரு மாணவன் சொன்னான், “படிக்க வேண்டும் என்ற ஆர்வமும், எதிர்கால கனவும் மட்டும் இருந்தால் போதும் சார், மீதி எல்லாத்தையும் கவர்மென்ட் பார்த்துக்கும்” என்றான். எனக்கு ஒரு நிமிடம் சிலிர்த்து விட்டது. ஒரு மாணவனுக்கு அரசாங்கத்தின் மீது இருக்கும் இந்த நம்பிக்கையை வேறு எந்த மாநிலத்திலாவது பெற முடியுமா?

சரி, இந்தப் பள்ளிக்கு மாணவர்கள் எப்படித் தேர்வு செய்யப்படுகிறார்கள்? ஒரே ஒரு ஒற்றைத் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில், மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என நினைத்தேன். ஆனால், அப்படி இல்லை. அதிலும் ஆச்சர்யங்கள் இருந்தன.

தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் அனைவருக்கும் பல்வேறு பருவங்களில் பல்வேறு வகையான மதிப்பீடுகள் நடக்கின்றன, அவை யாவும் மாநில அளவில் மென்பொருளில் உள்ளீடு செய்யப்படுகின்றன, முதலமைச்சர் ‘டேலண்ட்’ தேர்வு, பல்வேறு தேசிய ஆளுமைத் தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள் போன்ற பல்வேறு வகையான தேர்வுகளின் மதிப்பெண்களும் கணக்கிடப்படுகின்றன. இவை அனைத்துமே மாணவர்கள் தேர்வில் கணக்கிடப்படுகின்றன.

மேலும் ஆச்சர்யமாக, இப்படித் தேர்வு செய்யப்படும் மாணவர்களில் 69 சதவிகித இட ஒதுக்கீடும் பின்பற்றப்படுகிறது. சிறந்த மாணவர்களை உருவாக்குகிறோம் என வறட்டுத்தனமாக ‘மெரிட்’ என்று உருண்டு புரளாமல், இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் சமூக நீதியை உறுதி செய்து அதன் வழியாக, மாணவர்களின் வளர்ச்சியையும் உறுதி செய்கிறது. அடுத்த ஐந்து வருடங்களில் இந்த மாணவர்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குக் குறிப்பிடத் தகுந்த அளவில் பங்காற்றுவார்கள் என, என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். உண்மையில், இந்த மாடல் பள்ளிகள் பிற மாநிலங்களுக்கான ‘மாடல் பள்ளிகளே’. எனக் குறிப்பிட்டு, தமிழ்நாடு அரசையும், முதலமைச்சரையும் பாராட்டி இருக்கிறார்.

### ::ப்ளாஷ்பேக்



ஈ.குணசேகரன்

**நீண்ட நாள் ஆசை, நிறைவேறியது!**

சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு, 2014-ஆம் ஆண்டு கிடைத்தது. கழக முன்னோடி ஒருவரது இல்லத் திருமண விழாவுக்கு அழைப்பிதழ் வழங்கச் சென்றபோது இந்த வாய்ப்பைப் பெற்றேன், தலைவரைச் சந்தித்துப் புகைப்படம் எடுக்கவேண்டும் என்ற என்னுடைய நீண்ட நாள் ஆசை, இந்தத் தருணத்தில் நிறைவேறியது. அப்போது, தேர்தல் நிதியாக 1,000 ரூபாய் வழங்கி, வாழ்த்துப் பெற்ற நிகழ்வு, இப்போதும் நினைவில் நிற்கிறது.

– ஈ.குணசேகரன்,
வட்டப் பிரதிநிதி, கோவை வடக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்

**தேர்தலில் ஈடுபட அனுமதி!**

1956-ஆம் ஆண்டு, தேர்தல் சிறப்பு மாநாட்டுக்கு முன்னர், ‘திராவிட நாடு இலட்சியமும் தேர்தல் ஈடுபாடும்’ என ஆய்வு நடத்த முடிவு செய்து, குழு அமைத்தார், பேரறிஞர் அண்ணா. தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணத்தை முடித்து, திரும்பிய குழுவினரை அறிவகத்தில் அண்ணா வரவேற்ற செய்தியை வெளியிட்டுள்ளது கழகத்தின் ஏடான ‘நம்நாடு’. ‘‘தேர்தலில் ஈடுபடுகிறோம்’’ என்கிற அறிவிப்பின் மூலம் மக்களிடம் அனுமதி கோரி, அக்டோபர் மாதம், மாபெரும் பொதுக் கூட்டம், சென்னை திருவல்லிக்கேணியில் நடைபெற்றது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

572

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24-26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131